1975 நவம்பர் 7]

Tamil Nadu Leave Rules.

*83. *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the amendments issued after 4th September 1972 to the Tamil Nadu Leave Rules applicable to the teachers in Government Service, are not made applicable to the teachers serving under other agencies including Aided Schools; and

(*b*) if so, the reason therefor?

தமிழ் நாடு விடுப்பு விதிகள்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பணியில் உள்ள ஆசிரியர்களுக்குப் பொருந்துகிற தமிழ் நாடு விடுப்பு விதிகளில் 4-9-1972-க்குப் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்கள், அரசுதவி பெறும் பள்ளிகள் உட்பட ஏனைய நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பொருந்தும் வகையில் செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு, அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு இருப்பது போலவே விடுப்பு விதிகள் பொருந்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1975 முதற்கொண்டு அங்கீகாரம் உண்டு என்று சொல்லிவிட்டார்கள். 4-9-1972-க்குப் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்கள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும். ஆனால், அரசு ஆணை பிறப்பித்த தேதியிலிருந்துதான் கொடுக்கப்படும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் 4-9-1972 முதற்கொண்டு தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பொருந்துமாறு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: "There is no difference in the applicability of leave rules enjoyed by the teachers working in Government Schools and the teachers

working under other agencies" என்றுதான் இருக்கிறது. ஆகவே டிஸ்ட்ரிக்ட் போர்டைப் பொறுத்தவரையிலே, 1-4-1970 லிருந்து இந்த உரிமைகள் வழங்கப்படுகின்றன.

திரு. கே. எஸ். கணபதி : 4-9-1972-லிருந்து இந்த விதிகள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று கூறப்பட்டது. அப்போதைக்கப்போது ஒவ்வொரு திருத்தமும் கொண்டுவரும்போது, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று கல்வி இலாகா கூறி வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் தான் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு உள்ளதுபோல் விடுப்பு விதிகள் பொருந்தும். 1975-ல் தான் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. அதிலிருந்துதான் அவர்களுக்குப் பொருந்தும் என்று கல்வி இலாகா இயக்குநர் அறிவித்திருக்கிறார்கள். அவர் அரசைக் கலந்து செய்தாரா அல்லது அவரே ஆணை பிறப்பித்தாரா என்பதை அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித் தனியாக கவனத்திற்குக் கொண்டுவந்தால், நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. செ. முத்துசாமி : 4-9-1972-க்குப் பின்னால் என்னென்ன சலுகைகள் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ, அதாவது சரண்டர் லீவ், மெடிகல் லீவ் போன்ற அத்தனை சலுகைகளும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என அரசு ஆணையில் தெளிவாக உள்ளது. ஆனால், பொதுவாகவே கல்வி இலாகா அதிகாரிகள் ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்க வேண்டுமென்று ஜி.ஓ.வில் இல்லை என்று சொல்லி மறுத்துவிடு கிறார்கள். ஆகையால் 4-9-1972-க்குப் பின் என்னென்ன சலுகைகள் அறிவிக்கப் பட்டனவோ அத்தனையும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் பெற நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இது கேள்வி நேரம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய முழு விவரங்கள் என்னிடம் இல்லை. இதிலே குறிப்பிட்டிருப்பது

In the G.O., dated 24th May 1975 the Government have clarified that the teaching and non-teaching staff working in aided schools are eligible to get all the leave benefits that are given to the teaching and non-teaching staff in Government Schools என்பதுதான். இது கிளாரிபிகேஷன் என்ற அளவில் இருக்கிறது. உத்தரவு

வந்த காலத்திலிருந்துதான் நடைமுறைப்படுத்தப்படுவதாக இருக்கும். எங்கே யாவது குழப்பம் இருந்தால், அதைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதைப் பற்றி ஆராயலாம்.

(பிற்பகல் 4-10)

THIRU D. V. D'MONTE: Sir, may I know the number of teachers who have been adversely affected by these Leave Rules?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய புள்ளி விவரங்கள் இல்லே.

திரு. செ. முத்துசாமி: அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஊழியர் களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகைகள் அனைத்தும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் அந்தச் சலுகைகள் வழங்கப்படாமல் இருக்கிறது. உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட பிறகு தான், தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் நிலைமை இருந்தது. இப்போது தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டு, உள்ளாட்சித் துறையில் பணி புரியும் ஆசிரியர் களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கான உத்தரவை அரசு விரைவில் இடுமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே,

"The Leave Rules in Fundamental Rules are applicable to the staff of the Municipalities and the leave rules applicable to teachers in Government institutions are applicable to teachers in Municipal Schools."

என்றுதான் இருக்கிறது. நகராட்சிப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர் களுக்கும் அந்த உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. எந்த நகராட்சிப் பள்ளியிலாவது அந்த உரிமைகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் இருந்தால், அது குறித்து நடவடிக்கை தனியாக எடுக்கலாம்.